# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24.12.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 187 வது வசனத்தை ஓதினார்கள்:**

**(தூதரே) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தன செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:187)**

இன்ஷா அல்லாஹ் இரண்டு நாட்களுக்கு பிறகு காதியானில் டிசம்பர் 26ம் தேதி ஜல்சா சாலானா ஆரம்பமாகின்றது. அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா விதத்திலும் அருளுக்குரியதாக்குவானாக ஆமீன். 1947ற்கு முன்பு எந்த அளவுக்கு ஜல்சா பரவலாகவும், விரிவாகவும், இருந்ததோ, இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினைக்கு பிறகு காதியான் ஜல்சா அந்தளவுக்கு இருந்ததில்லை.

ஆனால் கடந்த சில வருடங்களாக இந்த ஜல்ஸாவும் மிகவும் பெரியதாகிவிட்டது. 1991ம் ஆண்டு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். அதன்பிறகு அதிகமாக மக்கள் வரத்தொடங்கினார்கள். அதன்பிறகு 2005ம் ஆண்டு நான் சென்ற போதும் கூட மிகப்பெரிய எண்ணிக்கையில் மக்கள் வந்தனர். அதன் பிறகு அல்லாஹ்வின் அருளினால் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 2005ல் வருகை தந்தவர்களின் அளவுக்கு எண்ணிக்கை இல்லைதான் என்றாலும், வருகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டுதான் இருக்கின்றது. கடந்த சில நாட்களாக காதியானிலிருந்து ஜல்ஸா ஏற்பாடுகள் தொடர்பாக ஜமாஅத் அமைப்பு சார்பாக அறிக்கை எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ரிப்போர்ட்டை படித்தபோது ரப்வா ஜல்ஸாவின் நினைவுகள் என் சிந்தனைக்கு வந்தன.

இந்த நாட்கள் 27 ஆண்டுகள் முன்பு வரை ரப்வா மற்றும் பாகிஸ்தான் அஹ்மதிகளின் ஆன்மாவுக்கு ஊக்கமளிக்கக்கூடிய நாட்களாக இருந்தன. ரப்வாவில் எல்லா இடங்களிலும் ஜல்சாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. ரப்வாவில் எல்லா இடங்களிலும் ஜல்ஸாவிற்கான ஆர்வமும், பரபரப்பும், உத்வேகமும் நிலவியது. ஜமாஅத் பள்ளிகூடங்களில் ஜல்சாவிற்கான அதிகாரியிடமிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் பணிக்கான படிவம் அனுப்பிவைக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு மாணவரும் அவர் எங்கு பணி செய்ய விரும்பிகின்றார்? என்று அந்த படிவத்தில் நிரப்பி கொடுப்பார். ஜல்ஸா அமைப்பாளர்களுக்கு குறிப்பிட்ட இடத்தில் பணியில் மாணவர்களை நியமிக்க தேவை ஏற்பட்டதில்லை. மாறாக, பெரும்பாலும் இளைஞர்களும், குழந்தைகளும் அவரவர் விருப்பத்திற்கேற்ப கிடைத்தாலும் அல்லது ஜல்ஸாவின் அமைப்பாளர்கள் தேவைக்கேற்ப நியமித்தாலும் இளைஞர்களிடத்தில் தொண்டாற்றுவதற்கும், பணி செய்வதற்கும் ஒரு சிறப்பான உணர்வு நிலவி வந்தது. 27 ஆண்டுகளில் ஒரு தலைமுறை புதிதாக பிறந்தது. அது தற்போது இளமைப்பருவத்தை எட்டியுள்ளது. இளைஞர்களாக இருந்தவர்கள் தற்போது அன்சாருல்லாஹ் பருவத்தை அடைந்திருப்பார்கள். முதல் பிரிவில் இருந்தவர்கள் 55 வயதிற்கு மேற்பட்டவர்களுடன் இணைந்திருப்பார்கள். தற்போதுள்ள இளைஞர்களுக்கு பணியின் முக்கியத்துவம் தெரியாமலிருக்கலாம். அங்கு ஜல்ஸா தற்போது நடைபெறாததனால் அவர்களுக்கு அந்த முக்கியத்துவம் தெரியாமலிருக்கும். எந்த குடும்பங்களில் ஜல்ஸாவைப் பற்றிய நினைவு கூறப்படுமோ, அதைப்பற்றி பேச்சு நடைபெற்று கொண்டிருக்குமோ அந்த குடும்பங்களைத் தவிர மற்ற இளம் தலைமுறையிடத்தில் பணிக்கான உணர்வும் இருக்க வாய்ப்பில்லை.

ரப்வாவின் பழைய குடும்பங்களில் ஜல்சாவினைப் பற்றி அவ்வப்போது நினைவு கூறப்படும் என்று நான் நம்புகிறேன். அவ்வாறில்லையென்றால் இனியாவது பேச்சு நடைபெற வேண்டும். ஏனென்றால், அப்போதுதான் வருகின்ற தலைமுறையும், குழந்தைகளும், இளைஞர்களும் அந்த சூழ்நிலையின் உணர்வை புதுப்பிக்க கூடியவர்களாக இருப்பார்கள். இது இளம் தலைமுறை ஏக்கம் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, அவர்களிடத்தில் ஒரு உறுதி ஏற்பட வேண்டும். தற்காலிகமாக தடைகளினால் எங்களது ரூஹை மரணிக்கச் செய்ய இயலாது, எங்களை நம்பிக்கை இழக்கச் செய்ய இயலாது. அல்லாஹ்வின் முன் குனிவதற்கும் அவனிடத்தில் வேண்டிக் கொண்டிருப்பதற்கும் தடைக்கற்களாக முடியாது என்று அவர்களிடத்தில் உறுதி இருக்க வேண்டும்.

எங்களது ஈமான் மற்றும் மன உறுதியை அந்த தடைகளால் தடுமாறச் செய்ய இயலாது என்ற உறுதி இருக்க வேண்டும். அந்த காலத்தில் ஒவ்வொரு குழந்தையும், முதியவரும் ஜல்ஸாவின் ஏற்பாடுகள் மற்றும் பணிகளில் உத்வேகம் மற்றும் உணர்வுடன் பங்கு பெற்று வந்தனர். ஜல்சாவை கேட்கக்கூடிய ஒவ்வொரு நபரும் தமது ஆத்மாவின் முன்னேற்றத்திற்குரிய ஏற்பாட்டை செய்துவந்தார். இந்த விஷயங்கள் இளம் தலைமுறைக்கும் தெரிந்திருக்க வேண்டும். இனி பிறக்கவுள்ள குழந்தைகளுக்கும் அது தெரிந்திருக்க வேண்டும். கடந்த 16,17 ஆண்டுகளில் பிறந்தவர்கள் தற்போது இளைஞர்களாகவுள்ளனர். ஜல்ஸாவின் நாட்கள் எப்படியிருந்தன என்று அவர்களும் அறிந்திருக்க வேண்டும். ரப்வா ஆடம்பரமின்றி எளிமையான முறையில் அலங்கரிக்கப்பட்டது. கடைவீதிகள் அழகுபடுத்தப்பட்டன. லட்சக்கணக்கில் வரக்கூடியவர்களின் வாழ்க்கையின் அடிப்படை தேவைகள் அவர்களது விருப்பத்திற்கேற்ப பூர்த்தி செய்யும் விதமாக தற்காலிக கடைவீதிகள் அமைக்கப்பட்டன. அழகுப்படுத்தப்பட்ட சிறப்பு ரெயில்கள் மற்றும் பேருந்துகள் வந்தன. ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தமது தகுதி மற்றும் வாய்ப்பிற்கேற்ப தமது வீட்டை சுத்தம் செய்தனர். வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தனர், அழகுப்படுத்தினர். வீட்டிற்கு முன்பிருந்த இடங்களில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. ஏனென்றால், பெரும்பாலான வீடுகள் சிறியதாக இருந்தன. அதில் விருந்தினர்களும், விருந்து உபசரிப்பவர்களும், கூ டாரம் அமைக்கப் பெறாமல் தங்குவது சாத்தியமில்லை. சில குடும்பங்கள் தமது வீட்டை விருந்தினர்களுக்கு கொடுத்துவிட்டு வெளியில் போடப்பட்ட கூடாரங்களுக்கு அவர்கள் சென்று விடுவார்கள். சுருக்கமாக, ரப்வாவில் வசித்தவர்களின் தியாகங்களுக்கான வியக்கத்தக்க காட்சி அரங்கேறியது. நாம் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுகிறோம் என்ற மகிழ்ச்சி ஒவ்வொரு முகத்திலும் தென்பட்டது. நான் கூறியது போன்று இவ்விஷயங்கள் ஒன்றும் தற்போது கற்பனையாகி விடவில்லை. மாறாக, இன்ஷா அல்லாஹ் இந்த பொழிவு மீண்டும் நிலைபெறும். நிச்சயமாக நிலைநிறுத்தப்படும். இறைவனின் ரஹ்மத்தின் மீது ஒரு போதும் அவநம்பிக்கை கொள்ளாமல் இருப்பது நமது கடமையாகும். அவனிடத்தில் அதனை வேண்டிக்கொண்டே இருக்க வேண்டும். என்னுடைய ரஹ்மத்தின் மீது ஒருபோதும் நம்பிக்கை இழந்து விடவேண்டாம் என அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் தமது நபியின் மூலமாக திருக்குர்ஆனில் நமக்கு கூறியுள்ள இவ்விஷயத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றோம். அவன் கூறுகின்றான்

**வழிகேடர்களைத் தவிர தமது ரப்பின் ரஹ்மத்திலிருந்து வேறெவர் நம்பிக்கையிழப்பார்?**

அந்த நாட்கள் மீண்டும் வராது என்றோ அல்லது அந்த நாட்கள் எப்படிவரும் என்பதிலோ நாம் அவநம்பிக்கை கொள்ளவில்லை. இன்ஷா அல்லாஹ். நான் கூறியது போன்று அந்நாட்கள் மீண்டும் வரும். நிச்சயமாக.. ஏனென்றால், நமக்கு அந்த இறைவனின வல்லமையின் மீது நம்பிக்கை உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகின்றார்கள்:**

கடினம் தமது உச்சத்தை அடைந்துவிடும்போது, தப்பிப்பதற்கு எவ்வழியும் தென்படாதபட்சத்தில் அவன் நிச்சயமாக தனது பணிவான அடியார்களுக்கு உதவி செய்கின்றான். இது அவனது பழமையான நடைமுறையாகும்.

எனவே நாம் பணிவை வெளிப்படுத்தி அவனிடத்தில் வேண்டிக் கொண்டிருந்தால் அவன் நிச்சயமாக உதவிக்காக வருவான்.

நம்பிக்கையிழந்த பிறகு மழையை பொழியச் செய்பவன் அவனே. மேலும் தனது அருட்களை பரப்பிவிடுகின்றான். அவனே உதவியாளனும், எல்லா புகழுக்கும் அரசனும் ஆவான்.

ஆத்மீக, பௌதீக வாழ்க்கையில் இறைவனின் சட்டம் இதுதான். பொதுவாக, நம்பிக்கையிழந்தவர்களுக்கு தனது அருட்களை வழங்கும் போது நம்பிக்கையாளர்களுடன் எவ்வாறு நடந்துகொள்வான். அல்லாஹ் அவர்களைப் பற்றி கூறுகின்றான்.

அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் நண்பனாவான். உண்மையான நம்பிக்கையாளர்களை அல்லாஹ் அவநம்பிக்கையில் ஆழ்த்தி விடுவதில்லை. மாறாக, அவன் முன் குனியக்கூடிய, பணிவின் உச்சத்தை அடைந்த நம்பிக்கையாளர்களுக்கு அவன் நிச்சயமாக உதவி செய்கின்றான். அவர்களின் உதவிக்காக நிச்சயமாக வருவான். அவர்களுக்கு அதிகமாக அருள் செய்வான். இதனை பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்..

நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றக்கூடிவர்களின் துஆக்களை ஒப்புக்கொள்கிறான். மேலும் அவர்களுக்கு தமது அருட்களை அதிகரித்து வழங்குகின்றான்.

ஆக அல்லாஹ்வின் அருள்செய்கின்ற விதம் மற்றும் தரம் மனித சிந்தனைக்கு மிகவும் அப்பாற்பட்டதாகும். எனவே அப்படிப்பட்ட இறைவன் மீது நாம் நம்பிக்கை கொண்டிருக்கும்போது எந்தவொரு சூழ்நிலையும், நினைவுகளும் நம்மை நம்பிக்கையிழக்க செய்ய வழியில்லை! ஆம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று சில நேரத்தில் இப்போது விடுதலைக்கு வழியேயில்லை என்று மனிதன் கருதுகின்றான். அப்போது இறைவன் புறமிருந்து உதவி வருகின்றது.

எனவே நாம் பகலையும் இரவையும் துஆவில் செலவிடுவது நமது கடமையாகும். குறிப்பாக இந்த ஜல்சாவின் நாட்களில் ஜல்சாவிற்காக வருகை தந்துள்ள மக்கள் காதியானில் தங்கியிருக்கும் நாட்களை துஆக்களில் கழியுங்கள். பாகிஸ்தானிலிருந்து வருகை தந்துள்ளவர்கள் குறிப்பாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகின்றான். வழிகேடர்களைத் தவிர அவனது ரஹ்மத்தின் மீது வேறெவரும் நம்பிக்கையிழப்பதில்லை. எனவே அவநம்பிக்கை என்பது பிறரின் பணியாகும். நாம் வழிகேடர்களை சார்ந்தவர்கள் அல்ல. நாம் இறுதிகாலத்து இமாம் மஹ்தியை ஏற்றுக் கொண்டவர்களாவோம். அல்லாஹ் நம்மை அந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் மூலமாக இருளிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வந்துள்ளான். வழிகேட்டில் திரிவதிலிருந்து காப்பாற்றி நேர்வழியில் செல்வதற்கு நமக்கு கற்றுத் தந்துள்ளான். பொதுவாக அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிகள் இந்த உறுதியாக ஈமானுடன் துன்பங்களையும் சகித்து கொள்கின்றனர். அதனால் தான் அஹ்மதிய்யத்தின் எதிரிகளால் ஏற்படும் துன்பங்களை அல்லாஹ்வின் திருப்திக்காக அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை. அதனால்தான் அவர்கள் அழுது புலம்பாமல் தமது ஷுஹதாக்களை (உயிர்தியாகிகளை) உரிய வகையில் நல்லடக்கம் செய்த பிறகு துஆ செய்தவாறு தமது வீடுகளுக்கு அவர்கள் திரும்புகின்றனர். மேலும் அல்லாஹ்வின் முன்பு மட்டுமே அழுகின்றனர். கண்ணீர் சிந்துகின்றனர். ஆனால் நல்ல மார்க்க அறிவு படைத்த ஜமாஅத் பணிகளை ஆற்றி வரக்கூடிய மக்களுள் ஒரு சிலர் கலக்கம் அடைந்து விடுகின்றனர். இந்த கடினத்தின் நாட்கள் நீண்டு கொண்டே செல்கின்றதே! நாளையோ அல்லது நாளை மறுநாளோ முடிந்து விடும் என்று கூறப்பட்டது. ஆனால் முடிவடைவதில்லையே என்று கூறி விடுகின்றனர். எனக்கு எழுதவும் செய்கின்றனர். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். சமுதாயத்தின் வாழ்க்கையில் நாட்களுக்கு எந்த முக்கியத்துவமுமில்லை. சமுதாயத்தின் காலத்தில் சில ஆண்டுகளுக்கும் கூட எந்த முக்கியத்துவமுமில்லை. முன்னேறக்கூடிய சமுதாயம் ஒரு அம்சத்தை மாத்திரம் பார்ப்பதில்லை. ஒரு விஷயத்தின் பக்கம் மட்டும் அவர்களின் பார்வை இருப்பதில்லை. சமுதாயத்தின்

ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் மீது அவர்களின் பார்வையிருக்கும். அல்லாஹ்வின் அருளினால் பாகிஸ்தானில் கடின நாட்களுக்குப் பிறகு ஜமாஅத் முன்னேற்றத்தின் வேகம் பல மடங்கு அதிகரித்து விட்டது. இன்னும் கூறப்போனால் பாகிஸ்தானிலும் கூட அல்லாஹ்வின் அருளினால் முன்பை விட அதிக முன்னேற்றம் உள்ளது. ஆம்! சில கடுமைகளும் உள்ளன. சில தடைகள் உள்ளன. உயிர், பொருள் இழப்புகள் நிகழ்கின்றன. ஜமாஅத் காலத்தின் கலீஃபாவை, காலத்தின் கலீஃபா ஜமாஅத்தினை நேரடியாக சந்திக்கும் ஏக்கம் இரண்டு பக்கமும் உள்ளது. அது ஒரு பக்கம் இருந்தாலும் அல்லாஹ் கருணை செய்தவாறு M.T.A.-வின் மூலமாக பாதி சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தவாறு ஒரு வழியை நமக்காக திறந்துள்ளான். பாகிஸ்தானிலிருந்து இஜ்திமாக்கள் மற்றும் ஜல்ஸாக்களில் கலந்துகொள்ள வருகின்றனர். ஆக, இறைவன் தடைகளுக்கிடையிலும் ஆத்மீக விருந்தினை நிறுத்துவிடவில்லை. இந்த அளவுக்கு இறைவனின் கருணை நம்மீது இருக்கும் போது ஒருபோதும் எவரது உள்ளத்திலும் அவநம்பிக்கையின் எண்ணங்கள் தோன்றக் கூடாது. இன்னும் சொல்லப்போனால் இந்த நாட்களில் ரப்வாவை சார்ந்தவர்களும், பாகிஸ்தானைச் சார்ந்தவர்களும் தமது நிம்மதியின்மையை அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு துஆக்களால் மாற்ற வேண்டும். நான் ரப்வாவின் பொலிவு நிறைந்த அந்த காட்சிகளை சூழ்நிலைகளை கற்பனை செய்து பார்க்கிறேன். அஹ்மதிய்யத்தின் வெற்றிக்குரிய இறைவனின் அந்த நியதியை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். இதுதான் ஒவ்வொரு அஹ்மதியின் பணியுமாகும். அந்த இறை நியதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்தை உலகில் மேலோங்கச் செய்யும் இறைநியதியாகும். அது முஹம்மதிய்ய மஸீஹின் ஜமாஅத்தில் உலகின் பெரும்பான்மையை இணைக்கின்ற இறைநியதியாகும். அது மற்ற சமுதாயங்களைப் போன்று பாகிஸ்தானிகளிடமும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைத்துவம் அற்புதமான முறையில் வெளிப்படும் இறைநியதியாகும். எனவே நாம் நமது துஆக்களில் நல்ல நிலையை ஏற்படுத்தியவாறு அந்த இறை நியதியை நம் வாழ்விலேயே காண்பதற்கு அல்லாஹ்விடத்தில் பணிவின் உச்சத்தைக் கடந்தவாறு வேண்டிக் கொண்டே செல்ல வேண்டும். ரப்வாவின் பொலிவு மற்றும் தூய சூழ்நிலையைப் பற்றி எனது சிந்தனையில் ரப்வாவின் தெருக்களில் மாநாட்டுப் பந்தலுக்கு சென்று திரும்பும் மக்கள் கூட்டம் மற்றும் பரபரப்பு பற்றிய நினைவும் வருகின்றது. ஆனால் அந்தக் கூட்டத்திலும் ஆண்களும், பெண்களும் உணர்வுமிக்கவர்களாக இருந்தனர். ஏதாவது ஒரு சிறிய விஷயம் ஏற்பட்டாலும் கூட வழிகாட்டுவதற்காக டியூட்டியில் நியமிக்கப்பட்ட அத்ஃபால் மற்றும் குத்தாம் அவர்களுக்கு கவனமூட்டி விடுவார்கள். கவனமூட்டும் போது உடனடியாக ஒவ்வொருவரும் தத்தமது பாதைகளில் செல்வர். தண்ணீர் வழிந்தோடுவது போன்று ஒரு மக்கள் கூட்டம் தொடர்ந்து அலைஅலையாய் செல்லும். மக்கள் எவ்வாறு ஜல்ஸாவிற்கு செல்வார்களோ அதே போன்று ஜல்ஸா முடிந்தவுடன் மக்கள் திரும்புவார்கள். ஒருவருக்கொருவர் தள்ளிக்கொண்டும், முந்திக்கொண்டும் சென்றது கிடையாது.

தெருவின் ஒரு பக்கம் ஆண்கள் செல்வார்கள். மற்றொரு பக்கம் பெண்கள் செல்வார்கள். ஒவ்வொரு ஆணும் பெண்ணின் புனிதத்தன்மை பற்றிய சிந்தனை உடையவர்களாக இருந்தார். மேலும் ஒவ்வொரு பெண்ணும் தனது தன்னடக்கத்தைக் கருத்தில் கொண்டவராக இருந்தார்.

ஆணும் பெண்ணும் தமது பாதைகளிலிருந்து விலகுவதற்கும், ஒருவர் மற்றவர் மீது மோதுகின்ற சூழல் ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமேயில்லை. பர்தாவை பேணுவதும், பார்வையை தாழ்த்திக் கொள்கின்ற நிலையும் எல்லா இடங்களிலும் காணப்பட்டது. இக்காட்சி மனிதனை மதீனாவின் தெருக்களுக்கு கொண்டு செல்கின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆண்களும், பெண்களும் தனித்தனியாக வழியாக செல்லுங்கள். பெண்கள் தனியாக (தெருக்களில்) சுவரையொட்டி செல்லுங்கள் எனக் கூறிய போது அதனை எந்த அளவுக்கு நபித்தோழர்கள் பேணினார்கள என்றால் அறிவிப்பில் வருகின்றது.

சில பெண்கள் எந்த அளவுக்கு சுவரையொட்டி சென்றார்கள் என்றால், அவர்களின் போர்வைகள் தெருக்களின் சுவர்களுக்கு இடையிலான கற்களில் சிக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இவையெல்லாம்

கட்டுப்படுதலின் உயர் முன்மாதிரியினை காட்டவும் தமது வெட்க நிலை மற்றும் புனிதத்தை நிலைநிறுத்தவுமே நடைபெற்றது. நான் கூறியது போன்று இக்காட்சிகள் ஜல்ஸாவின் நாட்களில் நமக்கு ரப்வாவிலும் காணக் கிடைத்தது. இஸ்லாமிய நடைமுறைகளின் முன்மாதிரிகளை பொதுவாக ரப்வாவிற்கு வரக்கூடியவர்களும் குறிப்பாக ஜல்ஸாவின் போது வரக்கூடியவர்களும் காணக் கூடியவர்களாக இருந்தார்கள். காதியானிலும் வழிப்பாதை மற்றும் தெருக்கள் குறுகியதாகவே உள்ளன. எனவே இந்த அடிப்படையில் நான் காதியான் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களிடத்திலும் கூறுகின்றேன். ஏனென்றால் அவர்களில் பலர் முதன்முறையாக ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களாக இருப்பார்கள். பல்வேறு நாடுகள் மற்றும் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். சில நேரத்தில் தத்தமது பாதைகளில் செல்லும் எண்ணம் இருக்காது. உங்களுக்கு டியூட்டியில் உள்ளவர்கள் கவனமூட்டுவதற்குப் பதிலாக ஆணும், பெண்ணும் தாமாகவே தத்தமது பாதைகளில் செல்ல வேண்டும். இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே காதியானில் இஸ்லாமிய போதனைகளின் நடைமுறைகளின் முன்மாதிரி தமக்கு தென்படுவதாக ஜமாஅத்தின் எதிரிகள் கூட காதியான் தொடர்பாக எழுதியுள்ளனர். ஆக இந்த நல்ல முன்னுதாரணம் இன்றும் காதியானில் நிலைபெற்றிருக்க வேண்டும். மிகத் தொலைவிலிருந்து அஹ்மதியல்லாத பலரும் கூட ஜல்ஸாவிற்கு வந்திருக்கலாம். எனவே அடக்கம் மற்றும் புனிதத் தன்மையினைப் பேணுவதுடன் தமது தொழுகையினையும் குறிப்பாக பேணி வாருங்கள். பாங்கு சப்தம் கேட்ட பிறகு ஒவ்வொருவரும் பள்ளியை நோக்கி சென்று விட வேண்டும். இதேபோன்று ஜல்ஸா நடைபெறும்போது கூட ஜல்ஸாவைக் கேட்பதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று ஜல்ஸா ஒன்றும் ஒரு திருவிழா அல்ல. எனக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் இதுவரை 6 அல்லது 7 ஆயிரம் விருந்தினர்கள் வந்து விட்டனர். இன்னும் வருவார்கள் இன்ஷா அல்லாஹ். ஒவ்வொருவரும் ஜல்ஸாவின் புனிதத்தன்மையினையும் கருத்தில் கொள்ளுங்கள். பாகிஸ்தானிலிருந்து பலர் வந்துள்ளனர். அவர்களுக்கு நேரடியாக ஜல்ஸாவில் கலந்து கொண்டு ஆன்மீக பயனடைவதற்கு அல்லாஹ் வாய்ப்பளிப்பளித்துள்ளான். எனவே ஒரு உண்மையான நம்பிக்கையாளராக முழுமையான வகையில் பயன் பெறுவதற்கு ஒவ்வொருவரும் அங்கு முயற்சி செய்ய வேண்டும். அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே நான் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொருவரின் உள்ளத்திலும் செயலிலும் தியாக உணர்வும் முழுமையாக வெளிப்பட வேண்டும் என்றும் கூறிக் கொள்கிறேன். தங்குமிடத்தில் எவ்வித ஒழுங்கற்ற நிலையும் இருக்கக் கூடாது. உணவு பரிமாறுதல் நேரத்தின் போதோ, மாநாட்டுப் பந்தலில் நுழையும் போதோ அல்லது வெளியேறும்போதோ எவ்வித ஒழுங்கீனமும் இருக்கக் கூடாது. பொதுவாக சுயநலத்தின் காரணமாகவே ஒழுங்கீனம் ஏற்படுகிறது. தனது உரிமையை முதலில் பெற வேண்டும் என்ற முயற்சியின் காரணமாகவும் ஏற்படுகின்றது. எனவே சிறு சிறு விஷயங்களிலிருந்து பெரும் விஷயங்கள் வரை தியாக உணர்வை வெளிப்படுத்தினால் ஒழுங்கீனம் ஏற்பட முடியாது. மேலும் எப்படியாவது ஏற்பாட்டில் ஒழுங்கற்ற நிலையை ஏற்படுத்தி தனது நோக்கத்தை அடைய சில நேரத்தில் சில சுயநலவாதிகள் பொறாமையின் காரணமாக ஆசைப்படுகின்றனர். சில நேரத்தில் அதற்காக முயற்சியும் செய்கின்றனர். எந்தவொரு அஹ்மதியும் ஒருபோதும் இப்படிப்பட்ட மக்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையாலோ அல்லது ஏதாவதொரு வகையில் தீங்கு ஏற்படும் வகையாலோ அவர்களுக்கு எந்தவொரு வாய்ப்பினையும் வழங்கி விடக்கூடாது. காதியானில் இந்துக்களும் உள்ளனர். சீக்கியர்களும், கிறித்தவர்களும் உள்ளனர். அனைவரையும் மதிப்பதும் கண்ணியப்படுத்துவதும் ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். பொதுவாக அங்கு வசிக்கக்கூடிய அனைவருமே நல்லவர்கள்தான். ஆனால் ஒருவரிடத்தில் எப்போதோவது, ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தாலும் உங்களது உணர்வுகளை நீங்கள் கட்டுப்படுத்துங்கள். காதியானில் வசிப்பவர்களும் இவ்விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். சில நேரத்தில் விருந்தினர்களின் தன்மானத்தின் காரணமாக அங்குள்ளவர்கள் உணர்ச்சிவசப்பட்டு வருகின்றனர். குழப்பம் ஏற்படும் அந்த வகையிலான எவ்வித உணர்வின் வெளிப்பாடும் கூடாது. அதேபோன்று அங்கு வசிக்கக்கூடியவர்கள் ஒருவருக்கொருவர் வழியில் சந்திக்கும் பொழுதும் ஸலாம்

கூறும் பழக்கத்தினை ஏற்படுத்துங்கள். அறிந்தவர்களுக்கும், அறியாதவர்களுக்கும் ஸலாம் கூறுங்கள். அப்போதுதான் இதன் மூலம் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் வட்டம் விரிவடையும்.

எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று இந்த ஜல்ஸாவின் நாட்கள் பாகிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு சிறப்பான நாட்களாக உள்ளன. எனவே அவர்களும், அதேபோன்று பாகிஸ்தானிலிருந்து காதியானிற்கு வருகை தந்துள்ளவர்களும் மற்ற நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளவர்களும் இந்தியாவைச் சார்ந்தவர்களும் அனைவரும் இந்நாட்களை குறிப்பாக துஆக்களில் கழியுங்கள்.

ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளவர்கள் குறிப்பாக தமது ஒவ்வொரு நொடிப் பொழுதையும் துஆக்களில் கழியுங்கள். அவர்களால் அவ்வாறு கழிக்க முடியும். ஏனென்றால் அவர்கள் அங்கு கலந்து கொள்வதன் நோக்கம் ஆன்மீக பயன் பெற வேண்டும் என்பதனை தவிர வேறு எந்த நோக்கமுமில்லை. தமது தர்பிய்யத்திற்கான ஏற்பாட்டினை செய்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு இதைத் தவிர வேறந்த வேலையுமில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கிராமத்தில் ஒரு ஆத்மீக சூழலில் இவ்வளவு எண்ணிக்கையில் அல்லாஹ் உங்களை ஒன்றுகூட்டி அவனிடத்தில் துஆ செய்யும் ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளான். அவனிடத்தில் அவனது அருளினை தேடுங்கள். அவனது உபகாரங்களுக்கு நன்றி கூறுங்கள். குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து (ஜல்ஸாவில்) கலந்து கொள்ளக் கூடியவர்கள் பாகிஸ்தானில் அஹ்மதிகளின் நிலை மற்றும் நாட்டின் நிலவரங்களுக்காக துஆக்கள் செய்யுங்கள்.

என்னை அழையுங்கள். நான் உங்களது துஆக்களை கேட்பேன் என்று அல்லாஹ் நமக்கு ஆறுதல் அளிப்பது அல்லாஹ்வின் கருணையாகும். அதற்குரிய சூழலும் கிடைக்கப் பெற்று விட்டால் அல்லாஹ்வின் பணிவான அடியார் அல்லாஹ்விடத்தில் வேண்டுவதற்கு இதனை விட சிறந்த வாய்ப்பு வேறு என்னவாக இருக்க முடியும்? இன்று எல்லாரையும் விட அதிகமாக பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு தான் துன்பமான நிலை உள்ளது. **அல்லாஹ் கூறுகின்றான்: நான் துன்பத்திற்கு உள்ளானவர்களின் துஆக்களை கேட்கிறேன்.**

எனவே இந்நாட்களில் உங்களது துன்பங்களை அல்லாஹ்விடத்தில் கண்ணீரால் சமர்ப்பியுங்கள். மேலும் அல்லாஹ்வின் வாக்குறுதியில் பங்குபெறக் கூடியவர்களாகத் திகழுங்கள்.

நிம்மதியிழந்தவர்கள் அவனை அழைக்கும் போது அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்பவர் யார்? அவன் அவர்களின் துன்பங்களை நீக்கி விடுகின்றான். அவன் உங்களை பூமியின் வாரிசாக்கி விடுகின்றான். அல்லாஹ்வை தவிர்த்து வணக்கத்திற்குரியவன் வேறெவரும் உங்களுக்கு உள்ளார்களா? உங்களில் மிகக் குறைவானவர்களே அறிவுரை பெறுகின்றனர்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆக்களில் உருக்கத்தின் உச்சநிலை அடைந்துவிடும் போது தான் ஒப்புக் கொள்ளப்படுதலின் தாக்கம் ஏற்படுகின்றது. உச்சகட்ட உருக்கம் ஏற்பட்டு விடும் போது அந்த துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களும் அதற்கான ஏற்பாடும் நடைபெறுகின்றது. முதலில் வானத்தில் ஏற்பாடு நடைபெறுகின்றது. அதன் பின்னர் அது பூமியில் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது. இது சிறிய விஷயமல்ல. மாறாக மிகப்பெரிய உண்மையாகும். உண்மை என்னவென்றால் எவர் அல்லாஹ்வின் தோற்றத்தைக் காண விரும்புகின்றாரோ அவர் துஆ செய்யட்டும்.

எனவே உங்களின் துஆக்களின் தாக்கத்தை பூமியில் பார்ப்பதற்கு முதலில் வானத்தின் கதவுகளை தட்ட வேண்டும்.

தங்களுடைய இழப்பினை நீக்கிக் கொள்ளவும் ஒரு சிறப்பான சூழலிலிருந்து பயன் அடையவும் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை உங்களில் சில ஆயிரம் பேர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். நீங்கள் உங்களுடைய இந்த வேதனையை ஒருமுகப்படுத்தி உங்களது பௌதீக ஆத்மீக

ஏற்பாட்டிற்கு வழிவகை செய்து கொள்ளுங்கள். டியூட்டி செய்யக் கூடியவர்களும் அங்கு சென்றுள்ளனர். அவர்களின் நோக்கம் டியூட்டி கொடுப்பது மட்டும்தான் என்று அவர்களுக்கு கருதி விட வேண்டாம். நிச்சயமாக தொண்டாற்றுங்கள். ஆனால் அங்குமிங்கும் செல்லும் போதும், நிற்கும் போதும், அமரும்போதும் உங்களது நாவினை திக்ரே இலாஹியின் மூலம் (இறைவனை நினைவு கூர்வதினால்) நனைத்து கொண்டிருங்கள்.

அல்லாஹ் எல்லாருக்கும் அதற்குரிய பாக்கியத்தை வழங்குவானாக! இந்த சந்தர்ப்பத்திலிருந்து பயனடைவது நான் கூறியது போன்று பாகிஸ்தானியர்கள் மாத்திரமல்ல. ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் பலன் பெறுவது அவசியமாகும். ஆத்மீக சூழல் கிடைத்துள்ளது. எனவே அதிலிருந்து முழுமையாக பயன் அடையுங்கள். நான் கூறியதுபோன்று பாகிஸ்தானியர்கள் குறிப்பாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்மான நிலையினை அல்லாஹ்வின் முன் எடுத்து வையுங்கள். நான் துன்பத்திற்கு ஆளானவர்களின் துஆவினை கேட்கிறேன் என்று அல்லாஹ்வும் கூறியுள்ளான். தமக்காக வேதனையடைந்தவரின் துஆவினை அல்ல. மாறாக, ஜமாஅத்திற்காக வேதனை கொண்டு துஆ செய்பவரின் துஆவினை அல்லாஹ் கேட்கிறான். உலகில் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மார்க்கத்தினை நிலைநிறுத்துவதற்காக துஆ செய்யக் கூடிய துன்பத்திற்குள்ளானவரின் துஆவினை அல்லாஹ் கண்டிப்பாக கேட்பான். இது மட்டுமல்ல. மாறாக உலகத்தின் மீதான அனுதாபத்தின் காரணமாக அனைத்து மார்க்கத்தைச் சார்ந்த மக்களுக்காகவும் அவர்களை அழிவிலிருந்து பாதுகாக்க துஆ செய்யக்கூடியவர்களின் துஆக்களை அல்லாஹ் நிச்சயமாக கேட்கின்றான். ஏனென்றால் அவர்கள் படைப்பினத்தின் மீதும், மனித இனத்தின் மீதும், மார்க்கத்தின் மீதும் அனுதாபம் கொண்டவர்களாக உள்ளனர். உங்களுடைய அமைதி குலைந்த நிலைகளைக் கொண்ட துஆக்களை ஒப்புக் கொண்டு உங்களுடைய துன்பங்களை நீக்கி விடுவேன் என்று மட்டும் அல்லாஹ் கூறவில்லை. உங்களது தனிப்பட்ட மற்றும் ஜமாஅத் அளவிலான துன்பங்களை நீக்கி விடுவோம். உங்களுக்கு துன்பம் தரக்கூடியவர்களின் கைகள் தடுக்கப்படும் என்று மட்டும் கூறவில்லை. அல்லாஹ் துன்பங்களுக்கு மருந்தாக துன்பங்களை மாத்திரம் நீக்குவதில்லை. மாறாக **அல்லாஹ் கூறுகின்றான்;**

**அவன் உங்களை பூமியின் வாரிசாக்கி விடுவான்.** இதற்கு முன்னும் ஆக்கியுள்ளான். இனியும் அவனது இறைநியதி இதுதான். எனவே நம்பிக்கையிழக்கும் கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் துன்பங்கள் மாத்திரம் நீங்கவில்லை. மாறாக துன்பங்கள் நீக்கப்பட்ட பிறகு பூமியின் வாரிசாக்கவும் படுகின்றனர். எனவே இயலாமை என்ற கண்ணீரை வடிக்காதீர்கள். அல்லது நாளையா? அல்லது நாளை மறுநாளா? எப்போது வரும்? என்ற விஷயங்களைப் பேசாதீர்கள். நீங்கள் பணிவுடனும், உருக்கத்துடன் துஆக்களை தொடர்ந்து செய்து வந்தால் அந்த நாள் துன்பங்களை நீக்கியவாறு கண்டிப்பாக வந்தே தீரும். துன்பங்களை நீக்கியவாறு மட்டும் அந்நாள் வராது. மாறாக எதிரிகளை உங்களுக்குக் கீழ் கொண்டு வரும் நாளாக ஆகி விடும் இன்ஷா அல்லாஹ்.

எனவே அந்த உண்மையான இறைவனின் முன் குனிந்தவாறு அவனது இறைவணக்கத்திற்குரிய கடமைகளை வழங்க முயற்சி செய்யுங்கள். அவநம்பிக்கை மற்றும் ஷிர்க் குறிப்பாக மறைமுக ஷிர்க்கிலிருந்தும் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களது பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் மூலமாக அல்லாஹ்வின் அருட்களிலிருந்து நாம் பயனடைந்து கொண்டே செல்வோம் (இன்ஷா அல்லாஹ்). நம்முடைய இறைவன் எவ்வளவு அன்பிற்குரிய இறைவனாவான். அவன் கூறுகின்றான்:

நீங்கள் என்னை மட்டும் வணங்கக் கூடியவர்கள் என்றால் உருக்கமாக நீங்கள் செய்த துஆக்களுக்கு நீங்கள் கேட்டதை விட அதிகமாக தருவேன். நம்முடைய உருக்கம் அல்லாஹ்வின் சென்றடையுமா? மாட்டாது? என்ற சந்தேகம் கூட கொள்ள வேண்டாம்.

**அல்லாஹ் கூறுகின்றான்: நான் உங்களுக்கு மிக அருகில் இருக்கின்றேன்.** நான் ஓதிய வசனத்தில் இதனையே அல்லாஹ் கூறுகின்றான். எந்த அளவுக்கு நெருக்கமாக என்றால் தூய உள்ளத்துடன் துஆ செய்கின்றவருக்கு நான் பதிலும் அளிக்கின்றேன். ஆனால் ஒரு நிபந்தனை உள்ளது. நீங்கள் உருக்கமாக துஆ செய்ய தொடங்கியுள்ள நிலையில் நிலைபெற வேண்டும். மேலும் எனது கட்டளைகளின் படி அமல் செய்ய வேண்டும். நான் கூறுகின்ற விஷயங்களின் செவிமடுக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆக்களுக்கும் அது ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் சில நேரங்களில் இடுப்பை முறிக்கக்கூடிய சோதனை வந்து விடும் நம்பிக்கையிழக்கச் செய்யும் சோதனைகளும் வந்து விடும். ஆனால் நிலையான தன்மை கொண்டவர் மற்றும் நல்லியல்பு கொண்டவர் கஷ்டங்களின் போதும் கூட தனது ரப்பின் கருணைகளின் நறுமணத்தை நுகர்கின்றார். அகப்பார்வையுடன் அவர் பார்க்கின்றார். அதன்பிறகு உதவி வருகின்றது.

பாருங்கள்! அன்னார் கூறுகின்றார்கள். அவர்கள் நறுமணம் நுகர்கின்றனர். நாம் ஜமாஅத் என்ற அளவில் இந்த எதிர்ப்புகள் மற்றும் துன்பங்களுக்கிடையில் நறுமணத்தை மட்டும் நுகரவில்லை. மாறாக அதன் கனிகளை உண்டு வருகின்றோம். நிச்சயமாக நாம் நமது உயிர், பொருள், தியாகத்தின் போது வேதனை அடைகின்றோம்; துன்பம் அடைகின்றோம். கலக்கம் அடைகின்றோம். ஆனால் இந்த ஷஹாதத்துகளின் தியாகங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு ஜமாஅத்திற்கு கனிகளை வழங்கி வருகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்:

இந்த சோதனைகள் வருவதில் உள்ள இரகசியம் என்னவென்றால் துஆவிற்கான உணர்வு அதிகரிக்கின்றது. ஏனென்றால் எந்த அளவுக்கு துன்பம் அதிகரித்து வருமோ அந்த அளவுக்கு ஆன்மாவில் உருக்கமும் அதிகரித்து வரும். இது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான காரணிகளில் ஒன்றாகும். ஒருபோதும் பயப்பட வேண்டாம். பொறுமையின்மை மற்றும் கலக்கமடைதல் காரணமாக அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. எனது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படாது என்றோ அல்லது ஒப்புக்கொள்ளப்படுவதில்லை என்றோ எண்ணம் கொள்ளக் கூடாது. இதுபோன்ற சந்தேகத்தின் மூலம் அல்லாஹ் துஆக்களை ஒப்புக் கொள்ளக்கூடியவன் ஆவான் என்ற பண்பை நிராகரிக்கும் தன்மையாக அமைந்து விடுகின்றது.

அதாவது எனது துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று கூறுவதன் மூலம் அல்லாஹ் துஆக்களை ஒப்புக் கொள்கிறான் என்ற பண்பை நீங்கள் நிராகரிக்கக்கூடிய மக்களாக ஆகி விடுவீர்கள்.

இன்று பாகிஸ்தானி அஹ்மதிகளை விட அதிகமாக அல்லது இந்தியாவின் எந்த பகுதிகளின் அஹ்மதிகளின் மீது சில கடுமைகளும் கொடுமைகளும் செய்யப்படுகின்றதோ அவர்களை விட அல்லது உலகின் எந்தப் பகுதிகளின் அஹ்மதிகள் மீது அநீதிகள் இழைக்கப்படுகின்றதோ அவர்களை விட நிம்மதியின்மை என்றால் என்ன என்பதனை வேறு எவர் நன்கறிவார்? எனவே நிம்மதியின்மை மற்றும் உருக்கம் ஏற்பட்டு விட்டால் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் காலமும் நெருங்கி விடுகின்றது.

இந்த அடிப்படையில் இன்று நான் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடிய அனைத்து மக்களிடத்திலும் மேலும் எந்த பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு இன்று முஹம்மதிய மஸீஹின் ஊரில் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்துள்ளதோ அவர்களிடத்திலும் கூறுகின்றேன். நீங்கள் உங்களது நிம்மதியின்மை மற்றும் நிர்பந்தத்தின் நிலைகளை துஆக்களாகவும், கண்ணீராகவும் மாற்றுவதன் உச்சகத்தை அடைந்து விடுங்கள். அடுத்து முன்னரை விட அதிகமாக அதனை உங்களது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அப்போதுதான் உங்களால் உண்மையான புரட்சியைக் கொண்டுவரக்கூடியவர்களாக ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மற்றொரு மேற்கோளையும் முன் வைக்கின்றேன்.

துஆவிற்கான போதனை வழங்காத எந்தவொரு நபியும் உலகிற்கு வரவில்லை. இந்த துஆ எப்படிப்பட்டதென்றால் அடியாருக்கும் இறைவனுக்குமிடையில் ஒரு உறுதியான தொடர்பை ஏற்படுத்துகின்றது. இவ்வழியில் அடி எடுத்து வைப்பதும் கஷ்டம்தான். ஆனால் எவர் அடி எடுத்து வைக்கின்றாரோ அவருக்கு எல்லா கஷ்டங்களையும் துஆ எளிதாக்கி விடுகின்றது. எவர் அல்லாஹ்விடத்தில் தொடர்ந்து துஆ செய்து கொண்டிருப்பாரோ அவர் புதிய மனிதராக விடுகின்றார். அவருடைய ஆத்மீக குறைகள் நீங்கும். அவருக்கு ஒருவகையான அமைதியும், இன்பமும் கிடைக்கின்றது. எல்லாவிதமான வெறுப்பு மற்றும் பகட்டிலிருந்து விலகியவாறு அவனது வழியில் ஏற்படுகின்ற அனைத்து கஷ்டங்களையும் இறைவனுக்காக சகித்துக் கொள்கின்றார். இறை திருப்தியைப் பெறுவதற்காக மற்றவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத கஷ்டங்களைக் கூட இவர்கள் சகித்துக் கொள்வார்கள். மற்றவர்களால் அந்தக் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளவும் முடியாது. ரஹ்மான், ரஹீம் ஆன இறைவன் கருணையே வடிவான இறைவன் அப்போது அவர் மீது அருள் செய்கின்றான்.

மேலும் அவருடைய எல்லா துன்பங்களையும் அவன் இன்பமாக மாற்றி விடுகின்றான். அல்லாஹ் நமக்கு இதுபோன்ற துஆக்களை செய்வதற்கும் பாக்கியத்தை தந்தருள்வானாக. மேலும் நமது துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக! மேலும் தமது துன்பங்களை நீக்குவானாக! மிக விரைவில் அதனை இன்பமாக மாற்றுவானாக! அவனுடைய அன்பின் பார்வை பட்டுக் கொண்டிருக்கும் அடியார்களாக அல்லாஹ் நம்மை எப்போதும் ஆக்கி வைப்பானாக!

இன்றும் ஒரு வேதனைமிக்க செய்தி உள்ளது. மர்தானில் நம்முடைய ஒரு இளைஞர் நேற்று ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர் மதிப்பிற்குரிய ஷேக் உமர் ஜாவித் சாஹிப் ஆவார்கள். ஷஹீத் மர்ஹூம் தமது மதிப்பிற்குரிய தந்தை ஷேக் ஜாவித் சாஹிப் மற்றும் சிறிய தந்தைவழி சகோதரர் ஜனாப் ஷேக் யாசிர் மஹ்மூத் சாஹிப் அவர்களுடன் காரில் தமது கடையிலிருந்து வீட்டிற்கு சுமார் இரவு 6.45 மணி அளவில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் பின்தொடர்ந்து அவர்களை சுட்டார்கள். -ஹீத் மர்ஹூம் உமர் ஜாவித் சாஹிப் பின்பக்க இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். அவரது தலை மற்றும் கழுத்தில் குண்டு பாயந்ததின் விளைவாக சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். முன் இருக்கையில் அமர்ந்திருந்த அவரது தந்தை ஷேக் ஜாவித் அஹ்மத் சாஹிபிற்கு கையில் குண்டு பாய்ந்து காயமடைந்துள்ளார்கள். டிரைவிங் செய்த யாசிர் மஹ்மூத் சாஹிபிற்கு கண்ணாடித் துண்டுகள் கையில் குத்தியதினால் காயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு காயமுற்றவர்களையும் தொடக்கநிலை சிகிச்சை வழங்கி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். அல்லாஹ்வின் அருளினால் இருவரும் நலமாக உள்ளனர். அல்லாஹ் அவர்களை கஷ்டங்களிலிருந்து பாதுகத்து விரைவில் முழுமையான குணத்தை வழங்குவானாக! அவர்களின் வண்டியில் 17, 18 குண்டுகளின் அடையாளங்கள் உள்ளது. எப்படியிருப்பினும் குற்றவாளிகள் அதன் பிறகு தப்பி ஓடிவிட்டனர். முதலமைச்சரின் தந்தை முஹம்மத் ஆஃஸம்கான் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூற வந்தார்கள்.

காயமடைந்தவர்கள் உரிய சிகிச்சை பெற மருத்துவமனை ஊழியர்களுக்கு வழிகாட்டுதலும் வழங்கினார்கள். பின்னர் ஷஹீத் மர்ஹூமின் வீட்டிற்கு இரங்கல் தெரியபடுத்தவும் சென்றார்கள்.

இந்த குடும்பத்தில் மதிப்பிற்குரிய ஷேக் நியாஸுத்தின் சாகிப் 1907-ல் பைஅத் செய்தார்கள். அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். ஷேக் மர்ஹூம் ஷஹீதுடைய தந்தை வழி பாட்டனார் ஷேக் நஸீர் அஹ்மத் சாகிப் 1932-ல் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் பைஅத் செய்தார்கள். இவர்களைப்பற்றி நான் ஏற்கனவே கூறியுள்ளேன். ஷஹீத் மர்ஹூமுடைய சிறிய தந்தை ஷேக் மஹ்மூத் சாஹிப் அவர்களுக்கு 7 சகோதரர்கள். இந்த குடும்பத்தில் முன்னரும் ஷஹாதத்

நடைபெற்றுள்ளது. மர்தான் பள்ளியில் நடைபெற்ற தற்கொலைப் படை தாக்குதலில் ஷஹீத் மர்ஹூமின் சிறிய தந்தைவழி சகோதரர் ஷேக் ஆபிர் ரிஸா சாஹிப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். பின்னர் அவருடைய சிறிய தந்தை நவம்பர் 8-ம் தேதி (8-11-10) ஷேக் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் அவர்களை எதிரிகள் ஷஹீதாக்கினார். துப்பாக்கியால் சுட்டனர். அதில் அவர்களின் மகன் காயமடைந்தான். 1974-லும் இவரது மாமனார் குடும்பத்தை சார்ந்த ஒருவர் ஷஹீதாகியுள்ளார். ஆக இந்த குடும்பத்தில் 1974லிருந்து இன்று வரை ஷஹாத்திற்குரிய சம்பவம் நடைபெற்று வருகிறது. ஆனால் இதன் பின்னரும் எல்லா கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர். முழு குடும்பமும் அதிக தைரியத்துடன் அதனை எதிர்கொண்டு வருகின்றது. நான் அந்த குடும்பத்தின் அனைவரிடத்திடனும் பேசிய போது கூட மிகவும் தைரியத்துடன், பொறுமையுடன் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர். ஷஹீத் மர்ஹூமின் சிறிய தந்தை மற்றும் அவரது அனைத்து சகோதரர்களும் 20-க்கும் மேற்பட்ட வழக்குகளில் இறைவழியில் கைதிகளாகவும் இருந்துள்ளனர். ஷஹீத் மர்ஹூமுடைய இரண்டு சிறிய தந்தைகளுக்கு ஜமாஅத் வழக்குகளில் 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அந்த குற்றத்திற்கு அதிகபட்ச தண்டனையே 3 ஆண்டு காலம் தான். ஆனால் உயர்நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது.

இதே போன்று நான் முன்னரும் கூறியுள்ளேன். இவரது குடும்பத்தினர் சிலரை எதிரிகள் கடத்தியும் இருந்தனர். இவர்களுடைய கடையில் ஒரு குண்டு வெடிப்பு நடைபெற்றது. சிறிய தந்தையுடன் தான் வியாபாரத்தில் பங்கு பெற்றுவந்தார்கள். ஹித்மத் கல்க் செயலராகவும் ஆடிட்டராகவும் தொண்டாற்றியுள்ளார்கள். அவர்கள் முன் எச்சரிக்கையாகவே இருந்து வந்தார்கள். விரைவாக கடையை அடைத்து விட்டு வரும்படி நான் அவர்களுக்கு கூறியிருந்தேன். ஆனால் அவர்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார்கள். வீட்டிலிருந்து 4, 5 அடி தூரத்தில் தான் அவர் மீது Firing செய்யப்பட்டு அவர் ஷஹூதாகியுள்ளார். 2 ஆண்டிற்கு முன்பு இவர்களின் திருமணம் நடைபெற்றது. அவர்களின் மனைவி விரைவில் குழந்தை பெற உள்ளார்கள். அல்லாஹ் அவர்களை நல்ல உடல்நலத்துடன் வைப்பானாக! மேலும் எல்லா வகையான கஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பானாக.

அல்லாஹ் ஷஹீத் மர்ஹூமுடைய அந்தஸ்த்தை உயர்த்துவானாக. மேலும் எல்லா உறவினர்களுக்கும் தைரியத்தையும், பொறுமையையும் வழங்குவானாக. இப்போது தொழுகைக்குப்பிறகு அவரின் ஜனாஸா காயிப் தொழுகை நடைபெறும். இன்ஷாஅல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 24.12.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**